DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 139/2021** |
| Deposition of Witness for | : PW2 |
| Name | : திருமலையாச்சி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 03.07.2026. |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 03 July 2026.

**A1 died. A2,A3 எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது செந்தட்டியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ஆணைமுத்து எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 1–ம் எதிரி வேலுசாமி இறந்துவிட்டார். சுமார் 8 ஆண்டுக்கு முன்பாக எனது மாமனார் ஆணைமுத்துகோனார் இறந்துவிட்டார். அந்த ஈமச்சடங்கை செய்யவிடாமல் பிரச்சனண செய்ததால் எங்களுக்கும் எதிரிகளுக்கும் முன்விரோதம் உண்டு. எனது அப்பா ஒன்றறை ஏக்கர் சொத்தை எனது பெயரில் எழுதிவைத்துள்ளார். சுமார் 8 ஆண்டுக்கு முன்பு மாலை 3.00 மணிக்கு எங்கள் ஊர் சுடுகாட்டிற்கு கிழக்கே எனக்கு சொந்தமான இடத்தில்

எதிரிகள் JCB டிராக்டர் வைத்து மண் எடுத்துகொண்டிருந்தார்கள். இது எனக்கு சொந்தமாக இடம் நீங்கள் ஏன் மண்ணை எடுக்கிறீர்கள் என்று கேட்டதற்கு அங்கு வந்த எதிரிகள் என்னையும் எனது கணவரையும் பார்த்து சுனா, பானா என்று அசிங்க பேசி 1-ம் எதிரி வேலுசாமி மறைத்து வைத்திருந்த அரிவாளை வைத்து எனது கணவரின் இடது கை மணிக்கட்டில் இரத்தகாயம் ஏற்படுத்தினார். பின்னர் 2-ம் எதிரியும், 3-ம் எதிரியும் சேர்ந்து 1-ம் எதிரியிடம் எனது கணவரை விடாதே அவனை வெட்டி கொல் என்று மிரட்டினார்கள். மேற்படி சம்பவத்தைசங்கர மூர்த்தி, தெத்தி மாடசாமி, ஆகியோர்கள் பார்த்தார்கள். நானும் எனது கணவரும் உயிருக்கு பயந்து ஓடி சின்னகோவிளான்குளம் போலிஸ் ஸ்டேசனுக்கு சென்றோம். போலிசார் மருத்துவனையில் செல்லுங்கள் என்று சொன்னார்கள். பின்னர் எனது கணவர் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனையில் சேர்ந்தேன். அ.சா.1 சிகிச்சையில் இருந்தபோது, அங்கு வந்த போலிசார் அ.சா.1 விசாரணை செய்தார்கள். அ.சா.1 சொல்ல சொல்ல எழுதினார்கள். அ.சா.1 புகார் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்து கொடுத்தார். அதில் நான் அறிவேன் சாட்சி கையெழுத்து செய்தேன். சம்பவத்தன்று பயன்படுத்திய அரிவாளை சம்பவ தேதியில் தெரியும். இப்போது எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் போலிசர் விசாரணையில் சொன்ன விபரங்களைத்தான் என் முதல் விசாணையில் சொன்னேன் என்றால் சரிதான். 1-ம் எதிரி வேலுசாமி என் கணவரின் தங்கை கணவர் ஆவார் என்றால் சரிதான். 2, 3-ம் எதிரிகள் என் கணவரின் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்தில் சொத்து பிரிப்பது சம்மந்தமாக ஏற்கனவே பிரச்சனை உள்து என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் அத்தாட்சியாக நான் கையெழுத்து போட்டேன் அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் விசாணையில் என் கணவர் போன்

செய்தபின்தான் மருத்துவமனைக்கு வந்தேன் என்றால் சரிதான். எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னல் சரியல்ல. எங்கள் குடும்பத்தில் உள்ள சொத்து பிரச்சனையை மணதில் வைத்துகொண்டு என் கணவருக்கு ஏற்பட்ட தற்செயல் காயத்திற்கு பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தொடரப்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.